RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 76 | மார்ச்.25 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# “மேற்காசிய போர் பாதிப்பிலிருந்து மக்களைக் காக்க பிரதமர் தயாரா?” முதல்வர் ஸ்டாலின் கேள்வி

சென்னை: மார்ச்.25-

மேற்காசியப் போரின் தாக்கங்களில் இருந்து இந்திய மக்களைப் பாதுகாக்க, நீங்கள் எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக ஊடக பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவு: கரோனா பெருந்தொற்றுக்கு தயாரானது போல மேற்கு ஆசிய போரின் பாதிப்புகளுக்கும் தயாராக இருக்க வேண்டும் என பிரதமர் மோடி கூறி இருக்கிறார். தயார்நிலையை மக்களிடம் ஒப்படைக்க முடியாது. எதற்குத் தயாராக வேண்டும் தலைமைக்கா அல்லது தலைமை இல்லாத நிலைக்கா?, தயாராக இருக்க வேண்டியது ஒன்றிய அரசா? நாட்டு மக்களா?

போர்ச்சூழல் தீவிரமடைந்த உடனே, அதன் தாக்கங்களை உணர்ந்து, கடந்த 11ம் தேதி தங்களுக்கு கடிதம் எழுதினேன். அதில், அனைத்துப் பயன்பாடுகளுக்குமான சிலிண்டர்கள் தடையின்றிக் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும், வளைகுடா நாடுகளில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க வேண்டும், மின் நிலையங்களுக்கான எரிவாயு விநியோக அளவுக் கட்டுப்பாடுகளை மாற்றி அமைக்க வேண்டும் என வலியுறுத்தி இருந்தேன்.

நிலைமையின் தீவிரத்தை ஒன்றிய ஆட்சியாளர்களுக்கு உணர்த்த மார்ச் 12ம் தேதி, எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்தின.

தங்களது நடவடிக்கைகளுக்குக் காத்திராமல் மார்ச் 14ம் தேதி பொறுப்புள்ள மாநில அரசாக உயர்நிலை ஆலோசனை



மேற்கொண்டு, உணவு உற்பத்தித் தொழிற்கூடங்கள் LPGக்குப் பதிலாக மின் அடுப்புகளைப் பயன்படுத்தும்போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்விற்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம், MSME நிறுவனங்கள் மின் அடுப்புகள், மின் சூடேற்றிகள் கொள்முதல் செய்வதற்கு மானியத்துடன் கூடிய கடன், தொழிற்சாலைகள் மாற்று எரிபொருட்களைப் பயன்படுத்திக்கொள்ள TNPCB இசைவாணை பெறத் தேவையில்லை, உணவகங்கள் மூடப்படும் வேளையில், விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு, காய்கறிகள் மற்றும் பழங்களை 194 உழவர் சந்தைகளில் எவ்விதக் கட்டுப்பாடு இல்லாமல் அவர்கள் விற்பனை செய்துகொள்ள அனுமதி உள்ளிட்ட அறிவிப்புகளை அறிவித்தோம்.

அப்போதே, மக்கள் நலனைக் காக்க ஒன்றிய அரசு என்ன செய்யப் போகிறது? என்று கேட்டேன். அப்போதும் பதில் இல்லை.

மார்ச் 15ம் தேதி, தொலைநோக்கும் முன்னெச்சரிக்கையும் இன்றிச் செயல்படும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

இத்தனைக்கும் பிறகு, “மக்கள் தயாராக இருக்க வேண்டும்” என்று மக்களுக்கே அறிவுரை வழங்குகிறீர்கள்.

மக்களைத் தயாராக இருக்கச் சொல்லும் முன், அவர்களைக் காக்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? மேற்காசியப் போரின் தாக்கங்களில் இருந்து இந்திய மக்களைப் பாதுகாக்க, நீங்கள் எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

இப்போது நாட்டின் கேள்வி ஒன்றுதான்: “எங்களைக் காக்கப் பிரதமர் தயாராக இருக்கிறாரா?” இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது பதிவில் தெரிவித்திருக்கிறார்.

## புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல்: திமுக போட்டியிடும் 13 தொகுதிகளின் வேட்பாளர்கள் அறிவிப்பு

புதுச்சேரி: மார்ச்.25-

புதுச்சேரியில் திமுக போட்டியிடும் 13 தொகுதிகளின் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். தற்போதுள்ள 6 எம்எல்ஏக்களுக்கும் மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கூட்டணியில் ஒரு தொகுதி விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் இண்டியா கூட்டணியில் காங்கிரஸ் திமுக இடையே தொடக்கம் முதலே கருத்து வேறுபாடு நிலவிவந்தது. கூட்டணிக்கு யார் தலைமை என்பதிலும், கூடுதல் தொகுதி பெறுவதிலும் இரு கட்சிகளுக்கும் இடையே பரஸ்பர மோதல் ஏற்பட்டது. மேலும் கூட்டணி, தொகுதி பங்கீடு செய்வதிலும் குழப்பம் நீடித்தது. இதனால் இருகட்சிகளுமே தனித்து போட்டியிட உள்ளதாக தகவல்கள் வெளியாகின.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள 30 தொகுதிகளில் பெரும்பாலான தொகுதிகளில் காங்கிரஸ் திமுக இருகட்சியை சேர்ந்த வேட்பாளர்களும் வேட்பு மனு தாக்கல் செய்தனர். இதனிடையே நீண்ட குழப்பங்களுக்கு பிறகு இண்டியா கூட்டணியில் தொகுதிப் பங்கீடு வேட்புமனு தாக்கல் இறுதி நாளான



நேற்று முடிவடைந்தது. இதில் காங்கிரஸூக்கு 16 இடங்களும், திமுகவுக்கு 14 இடங்களும் ஒதுக்கப்பட்டன.

மேலும் திமுக தரப்பில் கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு ஒரு தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் திமுக போட்டியிடும் 13 தொகுதிகளின் வேட்பாளர்களை திமுக ஒருங்கிணைப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி, புதுச்சேரி மாநில அமைப்பாளர் சிவா ஆகியோர் இன்று வெளியிட்டனர்.

அதன்விவரம்: * வில்லியனூர் திமுக மாநில அமைப்பாளர் சிவா எம்எல்ஏ, * மங்கலம்எஸ். எஸ். ரங்கன், * திருபுவனை அங்காளன்(சுயேட்சை எம்எல்ஏ), * பாகூர் எம்எல்ஏ செந்தில்குமார், * முதலியார்பேட்டை எம்எல்ஏ சம்பத், * உப்பளம்எம்எல்ஏ அனிபால்கென்னடி, * உருளையன்பேட்டை கோபால், * நெல்லித்தோப்பு கார்த்திகேயன், * ராஜ் பவன்விக்னேஷ் கண்ணன் (முன்னாள் அமைச்சர் ப. கண்ணன் மகன்), காலாப்பட்டு செந்தில்(எ) ரமேஷ், * கதிர்காமம் வடிவேலு, * காரைக்கால் தெற்கு எம்எல்ஏ நாஜிம், * நிரவி டி.ஆர்.பட்டினம் எம்எல்ஏ நாகதியாகராஜன் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதில் தற்போதுள்ள 6 எம்எல்ஏக்களுக்கும் மீண்டும் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் சமீபத்தில் திமுகவில் இணைந்த சுயேட்சை எம்எல்ஏ அங்காளனுக்கு சீட் கொடுக்கப்பட்டுள்ளது. கூட்டணியில் திமுக தரப்பில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு உழவர்கரை தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் மங்களம் தொகுதியில் முதல்வர் ரங்கசாமியை எதிர்த்து எஸ்.எஸ்.ரங்கன் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## “10 தோல்வி பழனிசாமி தேர்தலுக்கு பின் ‘படுதோல்வி’ பழனிசாமி ஆகிவிடுவார்” : உதயநிதி ஸ்டாலின் பேச்சு

திண்டுக்கல்: மார்ச்.25-

”10 தோல்வி அடைந்த பழனிசாமி, சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுக்கு பின்னர் ‘படுதோல்வி’ பழனிசாமி ஆகிவிடுவார்”, என திண்டுக்கல்லில் நடந்த இளைஞரணி நிர்வாகிகள் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

திண்டுக்கல்லில், திண்டுக்கல், தேனி மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம் இன்று செவ்வாய்கிழமை நடைபெற்றது. திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் வரவேற்றார். தேனி மாவட்ட செயலாளர்கள் கம்பம் ராமகிருஷ்ணன், தங்கதமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, அர.சக்கரபாணி ஆகியோர் கலந்துகொண்டு பேசினர்.

கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: கட்சி தலைமையின் உத்தரவுகள் அனைத்தையும் திறம்பட செயல்படுத்தும் மாவட்டங்களாக திண்டுக்கல், தேனி மாவட்ட நிர்வாகிகள் உள்ளனர். தேர்தலுக்கு இன்னும் 29 நாட்கள் உள்ளது. கடந்த



மக்களவை தேர்தலில் இளைஞரணியினரின் உழைப்பால் தான் 100க்கு 100 சதவீதம் வெற்றியை பெற முடிந்தது.

இந்தியாவில் பல கட்சிகள் பூத் கமிட்டி ஆள் இல்லாமல் திணறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் தமிழகத்தில் ஒவ்வொரு பூத்களிலும் இளைஞரணி நிர்வாகிகள் உள்ளனர். இளைஞர்களை பயன்படுத்தி நாம் வெற்றியைப் பெற வேண்டும். திமுகவில் எத்தனையோ அணிகள் இருந்தாலும் இதில் இளைஞரணி தான் முதன்மையானது என முன்னாள் முதல்வர் கருணாநிதியே சொல்லியுள்ளார்.

அவர் சொல்லியதை நிகழ்த்திக்காட்டும் நேரம் வந்துள்ளது. 2021 தேர்தல் வாக்குறுதிகளில், எதையெல்லாம் செய்துள்ளோம் என மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும். சில சொல்லாத வாக்குறுதிகளையும் நாம் செய்துள்ளோம். மகளிர் விடியல் திட்டத்தை நம்மைப் பார்த்து பல மாநிலங்களில் செயல்படுத்தியுள்ளனர். குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை தமிழக முதல்வர் திட்டங்களைப் பார்த்துப் பார்த்து செய்வதால் தான் தமிழகம் இந்தியாவில் முதன்மை மாநிலமாக மாறியுள்ளது.

அரசு செய்த திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அடிமைகளை உடன் வைத்துக்கொண்டு எப்படியாவது தமிழகத்தில் நுழைந்துவிடலாம் என பாஜக நினைக்கிறது. தமிழ்நாட்டில் கருப்பு சிவப்பு வேட்டி கட்டிய கடைசி தொண்டன் இருக்கும்வரை பாஜக தமிழகத்தில் நுழைய முடியாது. நீங்கள் சூழ்ச்சி செய்து, வித்தைகள் காட்டி வடநாட்டில் வேண்டுமானால் வெற்றி பெறலாம். தமிழ்நாட்டில் அது நடக்காது.

நடைபெறவுள்ள தேர்தல் டெல்லி அணிக்கும் தமிழகத்துக்குமான தேர்தல். இதில் தமிழக அணி நிச்சயம் வெற்றி பெறும். கட்சியினுடைய தலைவர்கள் வேறு கட்சி அலுவலகத்திற்கு சென்றால் அது தலைப்புச் செய்தியாக வெளிவரும். ஆனால் கடந்த இரண்டு தினங்களாக அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, அதிமுக அலுவலகத்திற்கு சென்றார் என்பதே செய்தியாக வருகிறது. அவர் இதுவரை டெல்லியில் உள்ள அமித் ஷா அலுவலகத்திற்கு சென்று வந்தார். அவரது அலுவலகம் சென்னையில் உள்ளதையே மறந்துவிட்டார். இதுதான் இன்றைய அதிமுகவின் நிலைமை.

தேர்தலுக்கு பிறகு பத்து தோல்வி பழனிசாமியை மக்கள் இனி ‘படுதோல்வி’ பழனிச்சாமியாக்கிவிடுவர். அதிமுக கூட்டணிக்கு வாரண்டியும் கிடையாது, கேரண்டியும் கிடையாது. பிஹாரில் வெற்றி பெற்ற நிதிஷ் குமாரை ஓங்கட்டிவிட்டு பாஜக குறுக்கு வழியில் ஆட்சியை பிடித்துவிட்டது. பத்து முறை முதல்வர் ஆன நிதிஷ் குமாருக்கே இந்த நிலை என்றால் ‘பாதம் தாங்கி’ பழனிசாமியின் நிலையை நினைத்து பாருங்கள். மக்களால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டணி திமுக கூட்டணி. பாஜக மட்டுமல்ல அதன் ”பி டீம்”, ”சி டீம்” என எத்தனை டீம் வந்தாலும் வெற்றிபெறப்போவது திமுக அணி தான்.

ஒவ்வொரு வாக்காளரையும் இரண்டு முறை இளைஞரணி நிர்வாகிகள் சந்திக்க வேண்டும். முதலில் உங்கள் வீட்டில் உள்ளவர்களிடம் ஓட்டு கேளுங்கள். அதன் பிறகு உறவினர்கள், நண்பர்கள் அவர்களின் குடும்பத்தினர். உங்கள் குடும்ப வாக்குகள் அனைத்தும் திமுகவிற்கு வருவதை உறுதிப்படுத்துங்கள். எல்லோரையும் சரிகட்டுவது சற்று சிரமம். ஆனால் அனைத்து முயற்சிகளையும் செய்யுங்கள்.தேர்தலுக்கு இன்னும் 29 நாட்கள் உள்ளது. இளைஞரணி நிர்வாகிகள் அனைவரும் முழு வேலையில் ஈடுபட வேண்டும்” என்று துணை முதல்வர் கூறினார். இக்கூட்டத்தில், எம்எல்ஏ.,க்கள் காந்தி ராஜன், மகாராஜன், சரவணக் குமார், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத்தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டுமதுரை மாவட்டம், சோழவந்தான் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட டி.ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வாக்குப்பதிவு மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு,பாதுகாப்பு பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்,ஆய்வு மேற்கொண்டார்.

## திமுக கூட்டணியில் விசிகவுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு

சென்னை: மார்ச்.25-

திமுக கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23ம் தேதி நடைபெற உள்ளது. திமுக சார்பில் கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை கடந்த பிப்ரவரி 22ம் தேதி தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. இதில் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மதிமுக, முஸ்லிம் லீக், மமக, கொமதேக கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு முடிந்துவிட்ட நிலையில், இன்று விசிக



தொகுதிப் பங்கீடும் கையெழுத்தாகியுள்ளது.

அதன்படி, திமுக கூட்டணியிலுள்ள விசிகவுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 2 பொதுத் தொகுதிகள், 6 தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் ஆகியோர் இன்று (மார்ச் 24) இந்த தொகுதி பங்கீட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். கடந்த முறை 6 தொகுதிகளில் போட்டியிட்ட விசிக, 4 தொகுதிகளில் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. இந்தமுறை கூடுதல் தொகுதிகளைப் பெறுவதில் உறுதியாக இருந்த விசிக 2 தொகுதிகளை அதிகமாக பெற்றிருக்கு.

திமுக கூட்டணியில் இதுவரை காங்கிரஸுக்கு 28, விசிகவுக்கு 8, இந்திய கம்யூனிஸ்ட் 5, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 5, மதிமுக 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 2, மனிதநேய மக்கள் கட்சி 2, கொமதேக 2 என தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. நாளை தேமுதிகவுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. மார்ச் 30ம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுரையில் மிருதங்க வித்வான் சூடியூர் D.S.ராஜப்பா 35ஆம் ஆண்டு குருபூஜை விழா

மதுரை மார்ச். 25-

மதுரை தமிழ்நாடு நாடக நடிகர் சங்க முன்னாள் தலைவரும், திண்டுக்கல் அங்கு விலாஸ் மிருதங்க வித்வானுமான கலைமாமணி சூடியூர் D.S. ராஜப்பா அவர்களின் 35 ஆம் ஆண்டு குருபூஜை விழா மதுரையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.



நிகழ்ச்சி விவரங்கள் மதுரை பெரியார் நிலையம் அருகில் உள்ள மீனாட்சி மஹாலில் நடைபெற்ற இந்த விழாவில், மறைந்த இசை நாடக ஆசிரியர்கள் மற்றும் கலைஞர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது. விழாவிற்கு வருகை தந்தவர்களை சூடியூர் மிருதங்க வித்வான் D.S.R. மோகன் வரவேற்றுப் பேசினார். சிறப்பு விருந்தினர்கள் இந்த விழாவில் கலைத்துறை மற்றும் பொதுத்துறையைச் சார்ந்த முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்: * M.R.M. பாலசுப்பிரமணியன் (தலைவர், தமிழ்நாடு இசை நாடகக் கலைஞர்கள் மாநிலப் பேரவை) * M.U. பிரேம்குமார் (இசை நாடக ஆசிரியர்)

* சக்கரவர்த்தி (எ) K. விஜயபாண்டியன் (உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர்)

நிகழ்ச்சி சிறப்பம்சங்கள் * காலை 9 மணியளவில் கலைஞர்களின் இன்னிசை கச்சேரி நடைபெற்றது. * நிகழ்ச்சியின் நிறைவாக மதிய உணவு வழங்கப்பட்டது.

* மதுரை தமிழ்நாடு நாடக நடிகர் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் D.S.R. மாணவர்கள் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் T.M. பாலமுருகன் நன்றி உரை ஆற்றினார். இவ்விழாவில் ஏராளமான கலைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு மறைந்த கலைமாமணி ஸ்ரீ.ஷி. ராஜப்பாவிற்குத் தங்களது மரியாதையைச் செலுத்தினர்.

# நெற்குப்பை சோமலெ நினைவு கிளை நூலகத்தில் வாசிப்புத் திருவிழா

## மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் நூல் விமர்சனம்

சிவகங்கை மார்ச். 25-

சிவகங்கை மாவட்டம் நெற்குப்பையில் உள்ள தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறை, உலகம் சுற்றிய தமிழர் சோமலெ நினைவு கிளை நூலகத்தில் மார்ச் 22, ஞாயிற்றுக்கிழமை அன்று "படிப்போம் பகிர்வோம்" மாதந்திர வாசிப்புத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.




நூல் விமர்சனம் மற்றும் கலந்தாய்வுஇந்த மாதத் தொடர் நிகழ்வில், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் அ. ஈஸ்வரன் எழுதிய புத்தகங்கள் மற்றும் நாடகங்கள் குறித்து பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் விரிவான கலந்தாய்வு செய்தனர்.

தமிழ்நாடு அரசின் சிறந்த நூல் விருது பெற்ற கலைநன்மணி அ. ஈஸ்வரன் எழுதிய "வாசிப்பை நேசிப்போம்!" மற்றும் "இலக்குகள் மாறுபடலாம்!" ஆகிய நாடக நூல்கள் குறித்து: * சாத்தப்பா அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி ஸ்ரீதேவி

* சிங்கை சிக்கந்தர் ஐயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவி கயல்விழி

* கணேசர் கல்வி மற்றும் அறிவியல் கல்லூரி மாணவி லாவண்யா * வாசகர் வட்டத்தைச் சேர்ந்த தமிழச்சி, ஸ்வேதா, சேதுக்கரசி

ஆகியோர் சிறப்பான முறையில் நூல் விமர்சனம் செய்தனர். இதில் ஏராளமான மாணவ மாணவிகள் கலந்து கொண்டு கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.விழிப்புணர்வு நாடகங்கள்

தொடர்ந்து, எழுத்தாளர் ஈஸ்வரன் எழுதிய பல்வேறு சமூக விழிப்புணர்வு நாடகங்களை மாணவர்கள் மேடையேற்றினர்:

* தேசியம்: மத நல்லிணக்கத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தி அமைந்த இந்த நாடகத்தில், வடுகபட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்கள் பவானி, மகேஷ், ரித்தீஷ், சஞ்சனா, காமேஸ்வரன், கிருத்திகராஜா மற்றும் அர்ச்சனா ஆகியோர் தத்ரூபமாக நடித்தனர்.

* நுகர்வோர்: போலியான பொருட்களை விற்பனை செய்து ஏமாற்றுபவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து விளக்கும் இந்த நாடகத்தில், சிங்கை சிக்கந்தர் ஐயா கல்லூரி மாணவிகள் விஷாலினி, தர்ஷினி ராஜ், வர்ஷினி மற்றும் ஆர்த்தி ஆகியோர் நடித்தனர்.

* இளம் இயந்திரங்கள்: குழந்தை தொழிலாளர் ஒழிப்பு முறையை வலியுறுத்திய இந்த நாடகத்தில், சாத்தப்பா அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் கணேசர் கலைக் கல்லூரி மாணவர்கள் ரட்சிதா, ஹரிணி, வேலுநாச்சியார், நந்தனா, அஸ்வின், இலக்கியா மற்றும் பாண்டிச்சேரி ஆகியோர் பங்கேற்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

சிறப்பு விருந்தினர் உரை

நிகழ்வில் எழுத்தாளர் அ. ஈஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பான முறையில் நடித்த மற்றும் விமர்சனம் செய்த மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

முன்னதாக, மாவட்ட மைய நூலகர் பாஸ்கரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். நிகழ்வின் நிறைவாக வாசகர் வட்டம் சார்பாக நன்றியுரை கூறப்பட்டது. இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை நெற்குப்பை சோமலெ நினைவு கிளை நூலகம் மற்றும் சிவகங்கை மாவட்ட மைய நூலக "நூலக நண்பர்கள் திட்டம்" இணைந்து செய்திருந்தனர்.

# காரைக்குடி நெக்ஸ்ட் லெவல் கிட்ஸ் ஸ்மார்ட் ப்ளே ஸ்கூல் ஆண்டுவிழா கோலாகலம்

காரைக்குடி மார்ச். 25-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கல்லூரி சாலையில் அமைந்துள்ள நெக்ஸ்ட் லெவல் கிட்ஸ் ஸ்மார்ட் ப்ளே ஸ்கூல் ஆண்டுவிழா, காரைக்குடி கண்ணதாசன் மணிமண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.







சிறப்பு விருந்தினர் வருகை

இவ்விழாவிற்கு அழகப்பா பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை தலைவர் முனைவர் நீ.ஜான்சன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அவர் மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பரிசுகளை வழங்கி, கல்வியின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார்.

விழா ஏற்பாடுகள்

பள்ளியின் நிறுவனர் மற்றும் வழக்கறிஞர் சிவசுப்பிரமணியன், நிர்வாக இயக்குநர் அனிதா சிவசுப்பிரமணியன், பள்ளியின் அறங்காவலர் பஞ்சாச்சரம் மற்றும் பள்ளியின் தாளாளர் பானுமதி ஆகியோர் இந்த விழாவிற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

கலை நிகழ்ச்சிகள்

பரிசளிப்பு விழாவைத் தொடர்ந்து, பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த பல்வேறு கலைநிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன.

இவ்விழாவில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




■ 178 கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி கறம்பக்குடி தாலுகா மற்றும் கரம்பக்குடியில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு ரவி தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு பேரணி கரம்பக்குடி பேரூராட்சி பகுதிகளில் இன்று நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் கரம்பக்குடி வட்டாட்சியர் திருமதி பிரவீனா மேரி, தேர்தல் துணை வட்டாட்சியர் திருமதி ஸ்டெல்லா, வட்ட வழங்கல் அலுவலர் முருகேசன் மற்றும் கரம்பக்குடி வருவாய் ஆய்வாளர் முருகேசன், மலையூர் வருவாய் ஆய்வாளர் திருமதி.உஷா மற்றும், அலுவலக பணியாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள், பேரூராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# வாழப்பாடி கராத்தே நேஷனல் டோர்னமென்டில் வெற்றி கிருஷ்ணகிரி மாணவர்களுக்கு எம்.எல்.ஏ மதியழகன் பாராட்டு

சேலம், மார்ச். 25-

சேலம் மாவட்டம் வாழப்பாடியில் நடைபெற்ற கராத்தே நேஷனல் டோர்னமென்டில் வெற்றி பெற்ற கிருஷ்ணகிரி மாணவர்களுக்கு, பர்கூர் சட்டமன்ற உறுப்பினரும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளருமான மதியழகன் அவர்கள் பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

# தேனி: தேர்தல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு அணிவகுப்பு 200க்கும் மேற்பட்ட காவலர்கள் பங்கேற்பு

உத்தமபாளையம் மார்ச். 25-

தமிழகத்தில் 2026 அன்று வருகின்ற சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, பொதுமக்கள் அச்சமின்றி 100% வாக்களிப்பதை வலியுறுத்தியும், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாகவும் தேனி மாவட்ட காவல்துறையினர் மற்றும் துணை ராணுவப் படையினர் இணைந்து சிறப்பு பாதுகாப்பு அணிவகுப்பை நடத்தினர்.

அணிவகுப்பு விவரம்:

தேனி மாவட்டம், உத்தமபாளையம் உட்கோட்ட காவல் எல்லைக்குட்பட்ட இராயப்பன்பட்டி காவல் நிலையத்திலிருந்து இந்த அணிவகுப்பு தொடங்கியது. மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஜெரால்ட் அலெக்சாண்டர் தலைமை தாங்கி அணிவகுப்பைத் தொடங்கி வைத்தார்.

முக்கிய பங்கேற்பாளர்கள்:

பாளையம் உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சந்திரசேகர் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கம்பம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் அ. தங்கமணி, இராயப்பன்பட்டி காவல் ஆய்வாளர் மற்றும் காவல் துறையினர் கலந்து கொண்டனர்.

பாதுகாப்பு உறுதி:

துணை ராணுவப் படையினர் மற்றும் பாளையம் உட்கோட்டத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட காவலர்கள் இந்த பாதுகாப்பு ஊர்வலத்தில் அணிவகுத்துச் சென்றனர். பொதுமக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் தேர்தல் பாதுகாப்பு குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் முக்கிய வீதிகள் வழியாக இந்த ஊர்வலம் நடைபெற்றது.

தேர்தல் நேரத்தில் எவ்வித அசம்பாவிதங்களும் இன்றி, அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெறுவதை உறுதி செய்ய இத்தகைய நடவடிக்கைகள் தொடரும் என காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் - 2026 முன்னிட்டு

# தேனி மாவட்டம், ஆண்டிபட்டி உட்கோட்டம், கடமலைக்குண்டு பகுதிகளில் கொடி அணிவகுப்பு

ஆண்டிபட்டி. மார்ச். 25-

தேனி மாவட்டத்தில் நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் ரூ 2026 முன்னிட்டு பொதுமக்கள் எவ்வித அச்சமுமின்றி சுதந்திரமாக வாக்களிக்கவும், தேர்தல் காலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலையை பாதுகாப்பாக நிலைநிறுத்தவும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீகூீ. நி. சினேஹா ப்ரியா, உத்தரவின் பேரில் ஆண்டிபட்டி உட்கோட்டம், கடமலைக்குண்டு பகுதிகளில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்.றி.கலைக்கதிரவன் அவர்கள் தலைமையில் காவல்துறையினர் மற்றும் மத்திய பாதுகாப்பு படையினர் இணைந்து கொடி அணிவகுப்பு (Flag March) மேற்கொண்டனர்.

# காரைக்குடி விவாத மேடையில் ஊடகவியலாளர் மீது தாக்குதல்

## ஜனநாயகத்தின் மீதான அராஜகம் என கண்டனம்

காரைக்குடி மார்ச். 25-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற 'தனியார் தொலைக்காட்சி' விவாத நிகழ்ச்சியின் போது, ஊடகவியலாளர் ராஜேஷ் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு தனிநபர் மீதான தாக்குதல் அல்ல, மாறாக ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடக சுதந்திரத்தின் மீது தொடுக்கப்பட்ட நேரடித் தாக்குதல் எனப் பரவலாக விமர்சிக்கப்படுகிறது.சம்பவத்தின் பின்னணிசிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற இந்த நேரலை விவாதத்தின் போது, கருத்து மோதல்கள் முற்றிய நிலையில் வன்முறை வெடித்தது. திமுகவின் மாவட்ட துணைச்செயலாளர் சேங்கை மாறன் தரப்பைச் சேர்ந்தவர்கள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.முக்கியக் கண்டனங்கள்: * கருத்துச் சுதந்திரம் நசுக்கப்படுதல்: ஒரு விவாத மேடையில் மாற்றுக் கருத்துகள் முன்வைக்கப்படும் போது, அதற்கு ஜனநாயக ரீதியாகப் பதிலளிக்காமல் வன்முறையைக் கையாள்வது அநாகரிகமான செயல் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. * அதிகார மதம்: ஆட்சியில் இருக்கும் மமதையில் திமுகவினர் அராஜகப் போக்கை கையில் எடுத்துள்ளதாகவும், இது அவர்களின் உண்மையான முகத்தைக் காட்டுவதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.




* பாதுகாப்பு கேள்விக்குறி: பொதுவெளியில் ஒரு செய்தி நிறுவனத்தின் பிரதிநிதிக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவினால், சாதாரண மக்களின் நிலை என்னவாகும் என்ற அச்சம் எழுந்துள்ளது.அரசியல் ரீதியான தாக்கம்கடந்த காலங்களில் மக்களிடம் மன்னிப்பு கேட்டவர்கள், இன்று அதிகார பலத்தால் வன்முறையை ஆயுதமாக்கி வருவதை மக்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். தோல்வி பயம் காரணமாகவே திமுகவினர் இதுபோன்ற கட்டுப்பாடற்ற அத்துமீறல்களில் ஈடுபடுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

› "வன்முறைக்கும் அராஜகத்திற்கும் ஜனநாயகத் தில் இடமி ல்லை. ஊடகவியலாளர்கள் மீதான இத்தகைய தாக்குதல்களுக்குத் தமிழக மக்கள் தகுந்த நேரத்தில் தீர்ப்பளிப்பார்கள்."இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி, வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.




# ஆர்.வி.எஸ் வேளாண்மைக் கல்லூரியில் உலக நீர் தின பயிற்சி பட்டறை தொடக்க விழா

தஞ்சாவூர், மார்ச். 25-

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் வட்டம் உசிலம்பட்டி ஆர் வி எஸ் வேளாண்மைக் கல்லூரியில் பாரதிய கிருஷக் சமாஜ் மற்றும் ஆர் வி எஸ் வேளாண்மைக் கல்லூரி இணைந்து நடத்திய இரண்டு நாள் "உலக நீர் தின பயிற்சி பட்டறை" துவக்க விழா கல்விக் குழுமத்தின் ஆலோசகர் எ.பாரி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கல்வி குழுமத்தின் தலைவர் குப்புசாமி பயிற்சி பட்டறையை தொடங்கி வைத்தார். வழக்குரைஞர் த.குருசாமி பயிற்சி விளக்க உரையாற்றினார். இயற்கை வேளாண்மை மற்றும் பயிர் பல்வகைப்படுத்துதல் உயர்மட்ட குழு உறுப்பினர் முனைவர் கிருஷன் பீர் சௌந்தரி சிறப்புரை ஆற்றினார். பயிற்சி பட்டறையில் கால நிலைக்கு ஏற்ற விவசாய முறைகளில் நீர்ப்பாசனத் திறன் மேம்பாடு மண்வளம் பாதுகாப்பு வேளாண் காடுகள் பங்களிப்பு தன்னார்வ கார்பன் சந்தையில் பங்கேற்பு உள்ளிட்டவை விளக்கப் பட்டன. முன்னதாக கல்லூரி இயக்குனர் முனைவர் பெ. பாண்டியராஜன் வரவேற்றார். ஜி.எஸ். தனபதி நன்றி கூறினார்.




# சூப்பர் ஸ்டார் அகாடமியில் 9 ம் ஆண்டு பட்டமளிப்பு விழா

மாதவரம், மார்ச். 25-

சென்னை புதிய லட்சுமிபுரத்தில் உள்ள ஸ்ரீ இந்திராணி அனுமந்தா திருமண மண்டபத்தில் சூப்பர் ஸ்டார் அகாடமி மற்றும் திவ்யா எஜுகேஷனல் அண்டு சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் 9ம் ஆண்டு பட்டமளிப்பு விழா சூப்பர் ஸ்டார் அகாடமியின் நிறுவனரும் முதல்வருமான டாக்டர் பி.உமாமகேஸ்வரி தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. சி.மஞ்சுளா அனைவரையும் வரவேற்றார். நிறுவனத்தின் ஆண்டறிக்கையை சி.இ.ஒ. டாக்டர் என்.திவ்யா வாசித்தார். நிகழ்ச்சியில் மாணவிகளின் கலாச்சாரம் நிறைந்த பரதநாட்டியம் மற்றும் அனுபவ பகிர்வுகள் நடைபெற்றது. பின்னர் நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக கொளத்தூர் நாராயணா இ டெக்னோ பள்ளியின் முதல்வர் மஞ்சளா பாலகிருஷ்ணா, ஆர்ச்சிட்ஸ் இன்டர்நேஷனல் பள்ளியின் முதல்வர் பிரியா கார்த்திக் ஆகியோர் கலந்துகொண்டு

அகாடமியில் பயிற்சி பெற்ற 100க்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு பட்டம் மற்றும் நினைவு பிரசுரங்களை வழங்கி பாராட்டி வாழ்த்தினர். இதில் குறிப்பிடதக்க சிறப்பு அம்சம் பட்டம் பெற்ற 80க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் முன்னதாகவே ஆசிரியர்களாக பணி அமர்த்தப்பட்டனர்.என்பது குறிப்பிடப்பட்டது. இதில் சூப்பர் ஸ்டார் அகாடமியின் அனைத்து நிலை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், மாணவிகள் உட்பட பெற்றோர்கள் திரளாக கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர். முடிவில் புஷ்பா பசுபதி அனைவருக்கும் நன்றி கூறினார்.



# திருவையாறு மேலவீதி, பராசக்தி ஸ்ரீ மாரியம்மன் கோயிலில் பக்தர்கள் பால் குடம், காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர்



தஞ்சாவூர் மார்ச். 25-

திருவையாறு மேலவீதியில்பராசக்தி ஸ்ரீ மாரியம்மன் கோயில் பங்குனி திருவிழாவை முன்னிட்டு கடந்த8ம் தேதி கம்பம் நடுதல், பூச்சொரிதலுடனும் கடந்த 15ம் தேதி ஞ 2வது காப்புக்கட்டி உற்சவத்துடன் திருவிழா தொடங்கியது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாளும் மாரியம்மன் சிறப்பு அலங்காரத்தில் எழுந்து வீதியுலா வந்து பக்தர்ளுக்கு அருள்பாலித்தார். நேற்று நூற்றுக்கும் மேற்பட்டோர் பால்குடம் எடுத்து வீதிவலம் வந்து பராசக்தி மாரியம்மன் கோயில் வந்தடைந்தனர். இத இதனை தொடர்ந்து மாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேகமும் ஆராதனைகள் நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை கோயில் டிரஸ்டி மாரிமுத்து, கலியமூர்த்தி மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் தலைமையில் தேர்தல் தொடர்பான பணிகள் குறித்து செய்தியாளர்கள் கூட்டம்



நீலகிரி, மார்ச்.25-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் தொடர்பான பணிகள் குறித்து, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் செய்தியாளர் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தேர்தல் தொடர்பான பணிகளை தீவிரமாக கண்காணிக்கும் வகையில், இந்திய தேர்தல் ஆணையம் நீலகிரி மாவட்டத்திற்கு 3 பொது பார்வையாளர்கள் 3 செலவுக் கண்காணிப்பு பார்வையாளர்கள் மற்றும் 1 காவல்துறை பார்வையாளரை நியமித்துள்ளது. அனைத்து பார்வையாளர்களும் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை புரிந்து, 19.03.2026 அன்று முதல் வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் பதற்றமான வாக்குச்சாவடி மையங்கள் உள்ளிட்டவைகள் குறித்து பார்வையிட்டு வருகின்றனர்.

மேலும், தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டு 27 பறக்கும் படை கண்காணிப்பு குழுக்கள் (FST), 27 நிலையான கண்காணிப்பு குழுக்கள் (SST), 3 வீடியோ கண்காணிப்பு குழுக்கள் (VST) மற்றும் 83 மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கூடுதலாக, 108 உதகமண்டலம் மற்றும் 109 கூடலூர் (SC) சட்டமன்ற தொகுதிகளுக்கு தலா 3 SST குழுக்கள், 108 உதகமண்டலம் தொகுதிக்கு 3 FST குழுக்கள் மற்றும் 1 VST குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 74 பதற்றமான வாக்குச்சாவடிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. தேர்தல் நடவடிக்கைகள் வெளிப்படையாக நடைபெற 95% வலை ஒளிபரப்பு (Webcasting) மற்றும் 5% CCTV கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.நீலகிரி மாவட்டத்தில் சுமார் 14,299 அஞ்சல் வாக்காளர்கள் உள்ளனர். இதில் 5,416 மாற்றுத்திறனாளிகள், 3,045 மூத்த குடிமக்கள் (85+), 822 பிறர், 1,390 காவல் துறை பணியாளர்கள், 3,623 வாக்குச்சாவடி பணியாளர்கள் மற்றும் 3 தடுப்புக் காவலில் உள்ளவர்கள் அடங்குவர். சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (Booth Level Officers) (மூலம் Form 12-D அஞ்சல் வாக்குச் சீட்டுகள் விநியோகம் மற்றும் சேகரிப்பு தொடர்பான பணிகள் நடைபெற்று வருகிறது

மேலும், நீலகிரி மாவட்டத்தில் மொத்தம் 736 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன (உதகமண்டலம் 254, கூடலூர் 238, குன்னூர் 244). அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சாய்வு பாதை, குடிநீர், கழிப்பறை, விளக்கு, அமர்வு வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்தும் தரைத் தளத்தில் அமைக்கப்பட்டுள்ளதால் 100% அணுகல் வசதி உறுதி செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து 736 வாக்குச்சாவடிகளுக்கும் மின்னனு வாக்குப்பதிவு (EVM மற்றும் VVPAT) இயந்திரங்களின் முதல் நிலை சோதனை (FLC) நிறைவு பெற்றுள்ளது. 1,662 Ballot Units (226%), 1,022 Control Units (139%) 1,016 VVPATS (138%) போதுமான அளவில் உள்ளன. முதல் கட்ட சீரற்றமயமாக்கல் பணியானது (Randomization) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது. அந்தவகையில், 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதிக்கு BU 304, CU 304, VVPAT330, 109 (5) BU 285, CU 285, VVPAT309 மற்றும் 110 குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கு BU 292, CU 292, VVPAT317 என அந்தந்த தொகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் காவல்துறையின் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கும் பணி உடனடியாக துவங்கப்படவுள்ளது.

நீலகிரி மாவட்ட அழைப்பு மையம் (1950) சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 16.03.2026 முதல் 22.03.2026 வரை பகல் நேரத்தில் 30 அழைப்புகளும், இரவு நேரத்தில் 41 அழைப்புகளும் பெறப்பட்டுள்ளன. அதேபோல் போல் சிகூஷிமிநிமிலி மூலம் 2 புகார்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது. Suvidha செயலி மூலம் 25 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் 8 அனுமதிக்கப்பட்டது. 6 நிராகரிக்கப்பட்டுள்ளது. 7 நடவடிக்கையில் உள்ளது. மீதம் 4 நிலுவையில் உள்ளது. மேலும், முந்தைய தேர்தல்களில் குறைந்த வாக்காளர்கள் பங்கேற்பு பதிவாகியுள்ள வாக்குச்சாவடிகள் கண்டறியப்பட்டுள்ளது. இதில் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதியில் 5 2 வாக்குச்சாவடிகளும், 109 கூடலூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் வாக்குச்சாவடிகளும் மற்றும் 110 குன்னூர் சட்டமன்ற தொகுதியில் 6 வாக்குச்சாவடிகள் 6ஜி60ஜி மொத்தம் 13 வாக்குச்சாவடிகளில் குறைந்த வாக்குப்பதிவு செய்துள்ளனர். இதனால் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் (Booth Level Officers) நடவடிக்கைகளை தீவிரப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 18.03.2026 முதல் 17.04.2026 வரை அனைத்து தொகுதிகளிலும் நடத்த திட்டமிடப்பட்டு பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வருகிறது. இதில் கோலம், நாடகம், சிலம்பாட்டம் / பிளாஷ் மோப், பேரணி, கலாச்சார நிகழ்ச்சிகள், மரத்தான், ஓவியம் மற்றும் கட்டுரை போட்டிகள், புதிய வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், பழங்குடியினர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தேர்தல் நடத்தை விதிகளின் படி சிறப்பாக செயல்பட நிலையான கண்காணிப்பு குழுக்கள் (SST), பறக்கும் படை குழுக்கள் (FST) மற்றும் மண்டல குழுக்களுக்கு (Zonal Teams) பல கட்டங்களாக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி குழுக்களால் 15.03.2026 முதல் 22.03.2026 வரை மொத்தம் ரூ.2.59 கோடி மதிப்பிலான பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதில், ரூ.2.48 கோடி மதிப்பில் திரும்பி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் வருகின்ற 31.03.2026 அன்று வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்க ஏற்பாடுகளும், வாகன தணிக்கையின் போது, சுற்றுலாப்பயணிகள் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளபடி, குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேல் சிறிய அளவிலான தொகை வைத்திருக்கும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட குழுவினர் ஆய்வு மேற்கொண்டு உடனடியாக வழங்க ஆலோசனைகளும் வழங்கப் பட்டுள்ளது.இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (நிலம்) பழனிச்சாமி, புனிதா (தேர்தல்), தேர்தல் தனி வட்டாட்சியர் காயத்ரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# செங்குன்றத்தில் 8அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு கூட்டம்

## மாநில தலைவர் கே.வேல்முருகன் ஆச்சாரி தலைமையில் நடைபெற்றது



மாதவரம், மார்ச். 25-

மாதவரம் தொகுதி செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் அருகே தமிழ் மாநில விஸ்வகர்மா ஐந்தொழிலாளர்கள் சங்கம் சார்பில் 8அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு கூட்டம் மாநில தலைவர் கே.வேல்முருகன் ஆச்சாரி தலைமையில் நடைபெற்றது.மாநில அமைப்பு செயலாளர் எஸ்.மணிகண்டன் ஆச்சாரி அனைவரையும் வரவேற்றார்.மாநில பொதுச் செயலாளர் டி.பாலச்சந்தர் ஆச்சாரி கவன ஈர்ப்பு உரை நிகழ்த்தினார். மாநில பொருளாளர் சுப்பிரமணியம், மாநில துணைத்தலைவர் ஸ்தபதி பாலாஜி, கௌரவ ஆலோசகர் ராஜேந்திரன், திருவள்ளூர் மாவட்ட தலைவர் சரவணன், திருவள்ளூர் மாவட்ட செயலாளர் தமிழ்ச்செல்வன் திருவள்ளூர் மாவட்ட பொருளாளர் ராஜேஷ் கண்ணன், கௌரவ ஆலோசகர்கள் சீனிவாசன், வடிவேல், பட்டறை சண்முகம், திருவள்ளூர் மாவட்ட இளைஞரணி கணேஷ், பாஸ்கர், குமரேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சிக்கு சென்னை காளிகாம்பாள் திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் இ.எம். எஸ்.மோகன் ஆச்சாரி, சென்னை காளிகாம்பாள் திருக்கோயில் அறங்காவலர் சர்வேஸ்வரன் ஆச்சாரி, செங்குன்றம் காமாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் டி.ஆர்.ரமேஷ் ஆச்சாரி ஆகியோர் ஐந்தொழிலாளர்கள் சமுதாயத்தின் வளர்ச்சி பணிகள் குறித்து சிறப்புரையாற்றினர். ஐந்தொழிலாளருக்கு தனிநல வாரியம், பிற்படுத்தப்பட்ட வகுப்பில் உள் ஒதுக்கீடு வழங்கிட வேண்டும், கொல்லர், தச்சர், கண்ணார், சிற்பி, பொற்கொல்லர் உள்ளிட்ட தொழிற் கூடங்களுக்கு மின்சார கட்டணத்தில் மானியம் வழங்கிட வேண்டும், ஐந்தொழில் பட்டறை புதிதாக அமைப்பதற்கும் தொழில் விரிவு படுத்துவதற்கும் சிறப்பு கடன் உதவி வழங்கிட வேண்டும், ஐந்தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு முக்கிய நகரங்களில் குறைந்த வாடகையில் விற்பனை கூடங்கள் அரசு அமைத்த தரவேண்டும், திருக்கோயில்களில் அறங்காவலர் குழு அமைக்கும் பொழுது விஸ்வகர்மா கம்மாளர் சமூகத்தில் ஒருவரை அவசியம் நியமிக்க வேண்டும், திருக்கோயில் பணிகளில் விஸ்வகர்மா சமூக மக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும், கருமார், மரதச்சர், கண்ணார், சிற்பி, பொற்கொல்லர் உள்ளிட்ட தொழில்களுக்கு தொழிற் பயிற்சி மையங்கள் டிப்ளமோ பட்டப்படிப்பு மூலம் பயிற்சி அளிக்க வேண்டும் உள்ளிட்ட 8 அம்ச கோரிக்கள் குறித்து வலியுறுத்தப்பட்டது. முடிவில் மாநில இளைஞரணி செயலாளர் கோகுல்ராஜ் ஆச்சாரி அனைவருக்கும் நன்றி கூறினார்.

# தாம்பரம் மாநகராட்சியில் கட்டிட அனுமதி இன்றி கட்டப்படும் கட்டிடங்கள் பற்றிய புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை




தாம்பரம் மார்ச். 25-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி நகர திட்டமிடல் அலுவலர் குமார் அவர்கள் மீது சமூக ஆர்வலர் நாஞ்சில் சி.மனோகரன் மற்றும் மக்கள் பசுமை இயக்கம் நிர்வாகிகள் புகார் தெரிவித்து உள்ளார்கள் தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள இடத்தில் கட்டிட அனுமதி இன்றி கட்டப்படும் கட்டிடங்கள் பற்றிய புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை மேலும் நீர்வளத்துறை இடத்தில் இருந்து கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் கடைப்பிடிக்காமல் கட்டப்பட்டு வரும் கட்டிடம் மீது புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை நெடுஞ்சாலை விதிமுறைகள் கடைப்பிடிக்காமல் கட்டப்பட்டு வரும் கட்டிடம் மீது புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை ஆக மொத்தத்தில் சமூக ஆர்வலர்கள் அளிக்கும் புகார் ஒவ்வொன்றும் குதிரை பேரம் பேசப்பட்டு தனி முதலாளிகளுக்கு ஆதரவாக அதிகாரிகள் இருந்து வருகின்றனர் என்று புகார் அளிக்கின்றார்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 10 கிலோ கஞ்சா பறிமுதல்இருவர் கைது. அம்பத்தூர் போலீசார் அதிரடி நடவடிக்கை!



மாதவரம், மார்ச். 25-

ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட டி 1 அம்பத்தூர் போலீசார் ஒரகடம், அம்மன் தெரு பகுதியில் சந்தேகத்திற்கிடமாக சுற்றிதிரிந்து கொண்டிருந்த ஆவடி சிந்து நகரை சேர்ந்த மகேஷ் (வ/23), பட்டாபிராம் அண்ணா நகரைச் சேர்ந்த அஜய்குமார் (வ/19) ஆகியோரை பிடித்து சோதனை செய்ததில் எதிரிகளிடம் சுமார் 10 கிலோ கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து கஞ்சா கைப்பற்றி விசாரணை மேற்கொண்டதில் எதிரிகள் ஆந்திர மாநிலம் திருப்பதியில் இருந்து கஞ்சாவை வாங்கி விற்பனைக்கு எடுத்து வந்தது தெரியவந்தது.பின்னர் அம்பத்தூர் போலீசார் மேற்படி இருவர் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டனர்.

# புதூர் பகுதியில் 7 கிலோ 300 கிராம் கஞ்சா பறிமுதல் ஒருவர் கைது



மாதவரம், மார்ச். 25-

ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட புதூர் காவல் ஆய்வாளர் சசிக்குமார் அறிவுறுத்தலின் பேரில் காவல்துறையினர் சண்முகபுரம் புழல் ஏரி பகுதியில் சந்தேகத்திற்கிடமாக சுற்றிதிரிந்து கொண்டிருந்த தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த நரசிம்மன் (வ/29) பிடித்து சோதனை செய்ததில் எதிரியிடம் சுமார் 7 கிலோ 300 கிராம் கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து கஞ்சா கைப்பற்றி விசாரணை மேற்கொண்டதில் குற்றவாளி ஆந்திர மாநிலத்தில் இருந்து கஞ்சாவை வாங்கி விற்பனைக்கு எடுத்து வந்தது தெரியவந்தது. இதனைத்தொடர்ந்து புதூர் போலீசார் மேற்படி குற்றவாளி மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி, மகநூர்பட்டியில் அ.தி.மு.க. மற்றும் த.வெ.க. கட்சிகளை சேர்ந்த 40க்கும் மேற்பட்டோர், பர்கூர் எம்.எல்.ஏ தே.மதியழகன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.புதிய உறுப்பினர்களுக்கு வேட்டி, சால்வை அணிவித்து வரவேற்பு அளிக்கப்பட்டது.நிகழ்ச்சியில் மாவட்ட மற்றும் உள்ளூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




■ சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 ஐ முன்னிட்டு, 100 சதவீதம் வாக்களிப்போம் என்ற இலக்கினை நோக்கி, வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு, காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று (24.3.2026) கல்லூரி மாணாக்கர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் காரைக்குடி அழகப்பா பல்கலைகழக பதிவாளர் செந்தில் ராஜன், மாவட்ட வழங்கல் அலுவலர் பழனிகுமார், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் சத்யா மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், மாணாக்கர்கள் உட்பட பலர் உள்ளனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026யை முன்னிட்டு, இராமநாதபுரம் முகமது சதக் ஹமீது மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இன்று (24.03.2026) தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்க திட்டத்துறை மூலம் நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், மாணவிகளுக்கு வாக்காளர் வாக்களிப்பதன் அவசியம் குறித்த கையேட்டினை வழங்கினார். உடன் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க மாவட்ட திட்ட அலுவலர் பாபு உள்ளார்



■ விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தேர்தல் பிரிவு கணினி அறையில் நேற்று (24.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் பொது பார்வையாளர்கள் உதயன் மிஷ்ரா,(202இராஜபாளையம் மற்றும் 203திருவில்லிபுத்தூர்) மற்றும் அனுப்குமார் யாதவ்,(206விருதுநகர் மற்றும் 207அருப்புக்கோட்டை) மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் 7 சட்டமன்றத் தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை கணினி மூலம் முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்யும் (First Randomization) பணிகள் நடைபெற்றது.



# தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் காளையார்கோவில் கிளைச் செயற்குழு கூட்டம் நடைபெற்றது



காளையார் கோவில் மார்ச். 25 -

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா பதின்ம மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க காளையார்கோவில் கிளையின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கிளையின் தலைவர் வீரபாண்டி தலைமை வகித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி கிளை துணைத் தலைவர் ஆரோக்கிய அனிதா முன்னிலை வகித்தனர். கிளைச் செயலாளர் அலெக்ஸாண்டர் துரை வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் பிரபு போரில்லா உலகம் படைப்போம் என்ற கருத்தில் பாடல் பாடி அறிவியல் இயக்க செயல்பாடுகளை எடுத்துக் கூறினார். கிளை துணைச் செயலாளர் அனன்சியா சமூக அக்கறை கொண்டவர்களாக அறிவியல் மனப்பான்மை கொண்டவர்களாக மாணவ மாணவிகளை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கிளையின் உறுப்பினர் சேர்க்கை துளிர் இல்லங்கள் அமைத்தல் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. கிளைப் பொருளாளர் ஜெயப்பிரியா நன்றி கூறினார். செயற்குழு உறுப்பினர் செல்வம் ஆசிரிய பெருமக்கள் வானவில் மன்ற கருத்தாளர்கள் பாண்டிச்செல்வி பிரின்சி தீபா நீலா கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம், தேனிஅல்லிநகரம் நகராட்சி உழவர் சந்தையில் நேற்று (24.03.2026) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையின் சார்பில், 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக காய்கறிகள் மற்றும் பழங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட சிற்பக் கண்காட்சியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் .ரஞ்ஜீத் சிங், பார்வையிட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

# குளத்தூர் தாலுகா, நார்த்தாமலை அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் திருவிழா

புதுக்கோட்டை., மார்ச்,25-

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, நார்த்தாமலை அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் திருவிழா 06.04.2026 (திங்கட்கிழமை) அன்று நடைபெறுவதை முன்னிட்டு அன்றைய தினம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் உள்@ர் விடுமுறை எனவும், அதற்கு பதிலாக 18.04.2026 சனிக்கிழமை அன்று பணிநாள் எனவும் அறிவிக்கப்படுகிறது. .

இந்த உள்ளூர் விடுமுறை 1881ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் கீழான விடுமுறை நாள் அல்ல எனவும், இந்த உள்ளூர் விடுமுறை நாளன்று புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மாவட்ட கருவூலகம் மற்றும் சார்நிலை கருவூலகங்களும் குறைந்தபட்ச அலுவலர்களுடன் அரசின் பாதுகாப்பினைக் கருதியும் அவசர அலுவல்கள் மேற்கொள்ளும் பொருட்டு திறந்திருக்கும். மேலும், கல்லூரி / பள்ளிகளில் தேர்வுகள் ஏற்கனவே அறிவிக்கபபட்டிருந்தால் இந்த விடுமுறை அறிவிப்பு பொருந்தாது எனவும், அரசு பொதுத்தேர்வுகள், அரசு அறிவித்த தேதிகளில் நடைபெறும்.

மேலும், 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெறுவதையொட்டி வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் 06.04.2026 என்பதால் அன்றைய தினம் மாவட்ட தேர்தல் அலுவலர் அலுவலகம் / அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகம்/ உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகங்கள் வழக்கம் போல் இயங்கும் எனவும், மேற்படி அலுவலகங்களுக்கு உள்ளூர் விடுமுறை அறிவிப்பு பொருந்தாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.



# சோக்காடி ஊராட்சியில் அதிமுக-பாமக நிர்வாகிகள், எம்.எல்.ஏ மதியழகன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி, மார்ச். 25-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி, கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியம், சோக்காடி ஊராட்சியில் அ.தி.மு.க. கட்சியை சேர்ந்த வார்டு உறுப்பினர் போத்தராஜா மற்றும் பா.ம.க. கட்சியை சேர்ந்த கிளை செயலாளர்கள் சின்னசாமி, குமார் ஆகியோர் தங்களது கட்சியிலிருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.

இவர்களை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன், எம்.எல்.ஏ முன்னிலையில் இணைத்துக் கொண்டு, வேட்டி மற்றும் சால்வை அணிவித்து வரவேற்றார்.

இந்நிகழ்வில் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் அன்பரசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செங்குட்டுவன், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி உள்ளிட்ட மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு புதிய உறுப்பினர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

## பொதுஅறிவிப்பு

**மாநில சுற்றுசூழல் தாக்க செயல் மதிப்பீட்டு ஆணையம்**(State Level Environment Impact Assessment Authority)- **தமிழ்நாடு கடிதஎண்.**SEIAA-SIA/TN/MIN/554758/2025

date 17.03.2026 **படி** Mr.M.**தௌபிக் என்ற நபருக்கு சிங்கம் புணரி தாலுகா, கிளவயல்கிராமம், , சிவகங்கை மாவட்டம். புல என்:**38/5/(P) **விஸ்திரம் 1.03.40 ஹெக்டேர் நிலப்பரப்பில் கிராவல் குவாரி நடத்த சுற்றுச்சூழல் தடையின்மை சான்று வழங்கியுள்ளது.**

**மேற்காணும் சான்று விபரத்தை மாநில சுற்றுசூழல் ஆணையம் 327, அண்ணா சாலை, மெட்ரோ,நந்தனம், சென்னை 600035. மற்றும்** SEIAA **இணையதளம்** http://environmentalclearance-nic.in **மூலம் தெரிந்து கொள்ளலாம்.**

**M.தௌபிக்**
**த/பெ.முகமது**
**பூலாம்பட்டி, திருப்பத்தூர்**
**சிவகங்கை மாவட்டம்**

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161